**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 02.09.2025**
**OS. No. 198/2020**
**வழக்கு சாட்சி PW.1–ராஜமாணிக்கம், த/பெ.ரங்கன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) என்னுடைய இடத்தில் கால்நடை பண்ணை கட்டவேண்டும் என்று பிரதிவாதிகள் பிரச்சனை செய்து வருவதால் அவர்கள் எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து எங்களுக்கு வேண்டும் என்றும், அவர்கள் பிரச்சனை செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன், ஒவ்வொரு பிரதிவாதிகளுக்கு எதிராக தனியாக எந்த பரிகாரமும் கேட்கவில்லை.

2) தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் ச.எண்.226/2 ஆகும். தாவா சொத்தின் சக்குபந்தி விவரங்கள் சொல்ல இயலுமா என்றால் மேற்கில் நல்லதம்பி பட்டா நிலம், கிழக்கில் மாதா பட்டா நிலம், வடக்கில் ராஜி வகையறா பட்டா நிலம், தெற்கில் பொன்காலி பட்டா நிலம் ஆகும். இந்த சக்குபந்தி விவரம் சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்து என்ன வகைபாடு கொண்ட நிலம் என்றால் மேய்ச்சல் புறம்போக்கு நிலம் என்று சொல்கிறார்கள். மேய்ச்சல் புறம்போக்கு நிலம் என்றால் அந்த பகுதியிலுள்ள விவசாயிகள் அனைவரும் தங்களது கால்நடைகளை மேய்த்து கொள்வதற்காக வகைபாடு செய்யப்பட்ட நிலம் என்றால் சரியல்ல, தற்போது வரை நாங்கள் தான் விவசாயம் செய்து வருகிறோம். தாவா சொத்து தற்போது அரசு நிலம் என்று தெரிந்த பிறகு நான் அதை அரசிடம் ஒப்படைக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை, அதை சுற்றி பட்டா நிலம் தான் உள்ளது, அதன் மத்தியில் 1 ஏக்கர் நிலம் தான் உள்ளது, அதில் தான் நாங்கள் பூர்வீகமாக விவசாயம் செய்து வருகிறோம். எனக்கு 67 வயது ஆகிறது.

3) தாவா சொத்தில் நாங்கள் பூர்வீகமாக அனுபவத்தில் இருந்து வருகிறோம். என் நிரூபண வாக்குமூலத்தில் 100 வருடங்களாக நாங்கள் அனுபவத்தில் இருப்பதற்காக சொல்லியுள்ளதை நிரூபிக்க ஆவணம் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அவ்வாறு எந்த ஆவணமும் எங்களிடம் இல்லை, கந்தாய ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து என்ன வகை வீடு, அதன் அளவுகள் ஆகியவற்றை என் நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தாக எவ்வளவு விஸ்தீரணம் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 5 சென்ட் நிலத்தில் உள்ளது. தாவா சொத்து தொடர்ச்சியாக செல்லும் நிலம் எல்லாம் மேய்ச்சல் நிலம் என்றால் சரிதான்.

4) தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் ச.எண்கள்.210/5 ல் பரப்பு 1.62.0 ஹெக், 226/2 ல் பரப்பு 6.88.0 ஹெக், 227/4 ல் பரப்பு 1.62.5 ஹெக், 228/3 ல் பரப்பு 2.47.5 ஹெக், 230/2 ல் பரப்பு 1.01.0 ஹெக், 231 ல் பரப்பு 3.74.0 ஹெக், 232/2 ல் பரப்பு 1.25.5 ஹெக் ஆகியவை மேய்ச்சல் நிலம் என வருவாய் துறையினரால் வகைபாடு செய்யப்பட்டு, அந்த நிலத்தில் தான் கால்நடை பராமரிப்பு துறையினரால் மேச்சேரி செம்மறி ஆட்டின திரவ விந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை, கரடு நிலமாக 30, 40 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலங்களில் தான் NLM திட்டத்தின் கீழ் மேச்சேரி இன செம்மறி ஆடுகளின் மரபணு முன்னேற்ற திட்டத்தின் முதல் பகுதியாக இயற்கை இன விருத்தி மூலம் சுமார் 66,000 குட்டிகள் பெறப்பட்டு, சுமார் 40 கோடிக்கு மேல் இத்திட்டம் செயல்படுத்தி வருகிறது என்றால் எனக்கு தெரியவில்லை, தாவா சொத்திலிருந்து 200, 300 மீட்டர் தொலைவில் அமைத்துளளார்கள், தாவா சொத்தில் நாங்கள் பூர்வீகமாக விவசாயம் செய்து வருகிறோம், வேறு நிலம் இல்லை.

5) தருமபுரி, சேலம், கரூர், திருப்பூர் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு தலைமை இடமாக மேற்கண்ட இடம் தான் செயல்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. இத்திட்டமே விவசாயிகளுக்கு பயன்படவும், பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை தரம் உயர்த்த வேண்டி கொண்டு வந்து முறையாக செயல்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

தமிழ்நாடு சட்டபேரவை விதி எண்.110 ன் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவிப்பின் படி, 223 லட்சத்தில் திட்டம் வகுக்கப்பட்டு, நிறைவேற்றி வருகிறது என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தின் அருகில் எங்களுக்கு பட்டா நிலமும் உள்ளது என்றால் சரிதான், என் சகோதரர்களுக்கும் எனக்கும் சேர்த்து உள்ளது. அந்த நிலத்தின் பட்டா தான் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் பட்டா நிலத்திற்குண்டான ஆவணம் தான் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கந்தாய ரசீதுகளில் பட்டா எண் குறிப்பிட்டுள்ளதால் அது என்னுடைய தாயார் மற்றும் தந்தை பெயரிலுள்ள பட்டா நிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கந்தாய ரசீதுகளில் பட்டா எண்.102 என்று குறிப்பிட்டுள்ள நிலமானது தற்போது என் தங்கை மாதா பெயரில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள ஆதார் கார்டு மற்றும் ரேஷன் கார்டு ஆகியவற்றில் கீழ்காடு நரியனூர் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து மேய்ச்சல் நிலம் என்பதால் கால்நடை பயன்பாட்டிற்கு மட்டும் தான் பயன்படுத்தவேண்டும் என்றும், தனிப்பட்ட நபர் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல, நாங்கள் அதில் தான் ஆண்டு ஆண்டுகாலமாக விவசாயம் செய்து வருகிறோம். நாங்கள் பூர்வீகமாக தாவா சொத்தில் வசிப்பதற்கு ஆதரமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேய்ச்சல் நிலம் பொறுத்து வேறு பயன்பாட்டிற்கு அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் எனில் அதற்கு இரட்டிப்பு சமமாக மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்பட்டு அரசு எடுத்து கொள்ளலாம் என்றால் எனக்கு தெரியவில்லை. மேய்ச்சல் நிலம் பொறுத்து பல தனிப்பட்ட அரசாணைகள் உள்ளது என்றும், தனி நபருக்கு ஒதுக்க இயலாது என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை கைபற்றியதாக தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால் முன்னோர்கள் காலத்திலிருந்து அங்கு தான் உள்ளோம். என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) தாவா சொத்திலுள்ள எங்கள் வீட்டினை எந்த தேதியில், யார் வந்து அளந்து, வரி விதிப்பு செய்தார்கள் என்றால் எந்த தேதி என்று எனக்கு சரியாக தெரியவில்லை, பஞ்சாயத்திலிருந்து வரி போட்டார்கள். வரிவிதிப்பு கொடுத்தால் மட்டும் தாவா சொத்தில்

எங்களுக்கு உரிமை வந்ததாக சொல்ல இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை தவிர மற்ற இடங்களில் கால்நடை துறையினர் காம்பௌண்ட் சுவர் கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கம்பிவேலி அமைக்க முற்பட்டபோது சட்டத்திற்கு புறம்பாக அரசு அலுவலர்களை பணி செய்ய விடாமல் தடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்திலேயே எனக்கு பட்டா நிலம் உள்ளது என்றும், அதனால் அதனை ஒட்டியுள்ள தாவா சொத்தில் எங்களுக்கு உரிமையுள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

8) 70 வருடங்களாக எங்களிடம் சொத்துவரி வசூல் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் என்னுடைய பட்டா நிலத்திற்குரியது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சட்டத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட நிலத்தை தான் விவசாயிகளுக்காக பயன்படுத்த முயற்சி செய்து வருகிறார்கள் என்பதை நான் இன்று தாக்கல் செய்த மேற்கண்ட ஆவணங்களே தெரியபடுத்துகிறது என்றும், அதனால் எனக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

9) மேய்ச்சல் நிலத்தை பொறுத்து தனிப்பட்ட நபர்களுக்கு உரிமை வழங்குவதற்கு சட்ட விதிமுறை இல்லை எனவும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. மேய்ச்சல் நிலம் பொறுத்து பொது பயன்பாட்டிற்கு அரசே எடுத்துக்கொள்ளவேண்டும் எனில் அதற்கு அதன் அளவில் இரட்டிப்பு சமமாக நிலம் ஒதுக்கப்பட்டு அரசு எடுத்து கொள்ள வேண்டும் என்று பல்வேறு அரசாணைகள் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. மற்ற அரசு புறம்போக்கு நிலங்களை விட மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களை பொறுத்தவரை கடுமையான ஆட்சேபனைக்குரிய நிலம் என்றால் சரியல்ல. எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அதிகபட்ச செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

10) தாவா சொத்து அமைந்துள்ள பள்ளிப்பட்டி கிராமத்தில் எனக்கு ச.எண்.226/1A ல் 0.27.50 ஏர்ஸ் நிலம் உள்ளது என்றும், அதற்கு பட்டா எண்.1488 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா தான் மேற்கண்ட பட்டா என்றால் சரிதான். **அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

ஓம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.